**ஜூலை - 19**

# தேசியச் செய்திகள்

## தேசிய உளவுத் தகவல் சேகரிப்பு மையம் (NATGRID)

- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் NATGRID கையெழுத்திட்டுள்ளது.
- இது முதல் தகவல் அறிக்கைகள் மற்றும் திருடப்பட்ட வாகனங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவதற்காக வேண்டி மையப்படுத்தப்பட்ட நிகழ்நேர அளவிலான இணையக் குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு மீதான கணினிக் கட்டமைப்புகளின் தரவுதளத்தை அணுகுவதாகும்.
- இத்தரவுதளத்திற்கான அணுகலுடன், NATGRID அமைப்பானது உளவுத்துறை மற்றும் விசாரணை நிறுவனங்களுக்கிடையேயான ஓர் இணைப்பாகச் செயல்படும்.
- இது நாடு முழுவதிலுமிருக்கும் 14,000 காவல் நிலையங்களின் தரவுகளுக்கு இடையில் ஓர் இணைப்பை வழங்கும்.
- ஆனால் மாநில காவல்துறை இதன் ஒரு பகுதியாக இருக்காது.
- இது 2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதல்களுக்குப் பிறகு முன்மொழியப்பட்டது.

## விக்ராந்த்

- 2022 ஆம் ஆண்டளவில் முதல் உள்நாட்டு விமானத் தாங்கிக் கப்பலான விக்ராந்த் கப்பாலானது செயல்முறைக்கு வந்துவிடும் என்று இந்திய கடற்படைப் பிரிவு எதிர்பார்க்கிறது.
- இது தற்போது ரஷ்யாவைச் சேர்ந்த ஐ.என்.எஸ் விக்ரமாதித்யாவைக் கொண்டு உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 2020 ஆம் ஆண்டில் ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை

- ஏறக்குறைய 690 மில்லியன் மக்கள், அல்லது உலக மக்கள் தொகையில் 8.9% பேர் 2019 ஆம் ஆண்டில் பசியுடன் இருந்தனர்.
- இது 2018 முதல் 10 மில்லியன் என்ற அளவிலும், 2014 முதல் கிட்டத்தட்ட 60 மில்லியன் என்ற அளவிலும் அதிகரித்து உள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) வருடாந்திர அறிக்கையான “உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை - மலிவு விலையில் ஆரோக்கியமான உணவுகளுக்கு வேண்டிய படி உணவு முறைகளை மாற்றி

அமைத்தல்" என்பதின் படி உள்ளதாகும்.

- பின்வரும் நிறுவனங்களால் இந்த அறிக்கையானது தயாரிக்கப் பட்டுள்ளது
  - உணவு மற்றும் விவசாய அமைப்பு
  - விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி
  - ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி
  - உலக உணவுத் திட்டம்
  - உலக சுகாதார அமைப்பு

## கடலுக்கடியில் உலகின் நீளமான மின்சாரக் கம்பி

- பிரிட்டனின் லிங்கன்ஷையரில் கடலுக்கடியில் உலகின் மிக நீளமான மின்சாரக் கம்பியின் (767 கி.மீ) கட்டுமானப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.
- இது பிரிட்டனுக்கும் டென்மார்க்குக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பகிர்ந்து கொள்ளும்.



## பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் ஆண்டு கூட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் உயர்மட்டப் பிரிவின் இறுதி அமர்வில் ஒரு முக்கிய உரை நிகழ்த்தினார்.
- இந்த அமர்வு ஐக்கிய நாடுகள் சபையின் 75வது ஆண்டு விழாவில் நடைபெறுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டில் லண்டனில் நடத்தப் பட்டது.
- 1946 ஆம் ஆண்டில் பொருளாதார மற்றும் சமூகக் குழுவிற்குத் தலைமை தாங்கிய முதல் நாடு இந்தியா ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## PM SVANidhi

- பிரதான் மந்திரி சாலையோர விற்பனையாளர்கள் ஆத்ம நிர்பர் நிதி என்பதே PM SVANidhi ஆகும்.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்தியப் பிரதேசம் இதுவரையில் முதலிடத்தில் உள்ளது.
- இது நாடு முழுவதும் சிறு வணிகங்களில் ஈடுபடும் சாலையோர விற்பனையாளர்களுக்கு உதவுவதற்கும் அவர்களை முறைப்படுத்துவதற்கும் பயன்படும் ஒரு மத்தியத் துறை சார்ந்த திட்டமாகும்.
- இத்திட்டம் வீட்டுவசதி மற்றும் நகர விவகார அமைச்சகத்தால் நிதியளிக்கப் படுகிறது.

## பரிவேஷ்

- சுரங்கத் திட்ட இணைய வாயிலை பரிவேஷ் வலைதளத்துடன் இணைக்க நிலக்கரி அமைச்சகமானது திட்டமிட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை இணைய வழியில் சமர்ப்பித்தல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றுக்கான ஒற்றை வாயிலாக இது உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம், வணிக ரீதியிலான சுரங்கத்திற்காக வேண்டி 41 நிலக்கரித் தொகுதிகளை ஏலம் விடும் பணியை அரசாங்கம் தொடங்கியது.
- இது இந்தியாவின் நிலக்கரித் துறையைத் தனியாருக்கு அனுமதியளிக்கும் ஒரு மிகப்பெரிய நடவடிக்கையாகும்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## நியோவிஸ் வால்மீன்

- இந்த வால்மீன் ஆனது ஜூலை 22 ஆம் தேதி புவியின் சுற்றுப்பாதையை கடக்கும் போது பூமிக்கு மிக அருகில் அதாவது சுமார் 103 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் காணப்படும்.
- இது இந்தியா உட்பட புவியின் வடக்கு அரைக்கோளத்தில் மிகத் தெளிவாகத் காணப்படும்.
- கிட்டத்தட்ட 6000 ஆண்டுகளுக்குப் பிறகே, அதாவது 8,786 ஆம் ஆண்டில் தான், அடுத்த முறை பூமியில் இருந்து நியோவிஸ் வால்மீனைக் காண முடியும். எனவே இது ஓர் அரிய நிகழ்வாகும்.
- இதை அமெரிக்காவின் தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் கண்டுபிடித்துள்ளது.



## 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகம் திட்டம்

- இஞ்சினுயுட்டி (புத்திக் கூர்மை என்று பொருள்) என்பது ஒரு தானியங்கி வானூர்தி (ரோபோ ஹெலிகாப்டர்) ஆகும். இது 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட உள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தின் நிலைமைகள் வானூர்திப் பயணத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை இது சோதனை செய்யும்.
- மற்றொரு கிரகத்தில் கட்டுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்தை நிகழ்த்தும் முதல் வானூர்தி இதுவாகும்.
- செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வசிக்கக் கூடிய நிலைமைகளின் அறிகுறிகளை 2020 ஆம் ஆண்டின் செவ்வாய் கிரகத் திட்டம் கண்டுணரும்.
- இது விடாமுயற்சி (Perseverance) என்று பெயர் கொண்ட ஒரு சுற்றித் திரியும் வாகனத்தையும் (Rover) உடன் கொண்டு செல்லும்.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகளாவிய மனிதாபிமான விருதுகள் 2020

- இது உலக மனிதாபிமான இயக்கத்தின் "மதிப்பிற்குரியோருக்கு மரியாதை செலுத்துதல்" (Honouring the Honourable) என்ற முயற்சியின் ஒரு பகுதியாக நிறுவப் பட்டுள்ளது.
- சச்சின் அவஸ்தி என்பவர் தேசிய ஊடக மன்றத்தின் தலைவரும், ஸ்ரீ ராம் சேவா என்ற இயக்கத்தின் நிறுவனருமாவார்.
- இவருக்கு "சிறந்த விளம்பரதாரர்" என்ற விருது வழங்கப் பட்டுள்ளது.
- இவர் 2014 ஆம் ஆண்டில் தூய்மை இந்தியா - சுந்தர இந்தியத் திட்டம் என்ற திட்டத்தை ஆரம்பித்து வைத்து, இந்தியாவில் தூய்மைக்கான முதல் கட்டணமில்லா தொலைபேசி எண்ணை வெளியிட்டார்.

## 2020 வான் கர்மன் விருது

- 2020 ஆம் ஆண்டிற்கான வான் கர்மன் விருதை இஸ்ரோ தலைவர் கே.சிவன் பெறுவார் என்று சர்வதேச விண்வெளி வீரர்கள் நிறுவனமானது அறிவித்து உள்ளது.
- இந்த விருதானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பாரீஸில் டாக்டர் கே.சிவனுக்கு வழங்கப் படும்.




ISRO chief Sivan named as 2020 Von Karman award recipient by IAA, to be conferred in March -...

## 2020 மோஹுன் பாகன் ரத்னா


- 2020 ஆம் ஆண்டிற்கான மோஹுன் பாகன் ரத்னா விருதானது முன்னாள் இந்திய ஹாக்கி வீரர் குர்பக்ஸ் சிங் மற்றும் மேற்கு வங்காள முன்னாள் கிரிக்கெட் வீரர் மற்றும் பயிற்சியாளரான பாலாஷ் நந்திக்கு வழங்கப்பட இருக்கிறது.
- கால்பந்து விளையாட்டைச் சார்ந்த யாருக்கும் மோஹுன் பாகன் ரத்னா விருதானது வழங்கப் படாதது இதுவே முதல் முறையாகும்.
- பழம்பெரும் ஹாக்கி வீரரான அசோக் குமாருக்கு கொல்கத்தா நகரக் கால்பந்து குழுவான மோஹுன் பாகன் விளையாட்டுக் குழுவினால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இவர் 1975 ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற இந்திய ஹாக்கி அணியின் முக்கிய வீரராவார்.
- அசோக் குமார் சிறந்த ஹாக்கி வீரரான தியான் சந்தின் மகன் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## உலக கடல் பறவைகள் தினம் - ஜூலை 3

- கடல்வாழ் சூழலுக்கேற்ப மிகவும் பொருந்தக் கூடிய வகையில் உள்ளதைத் தவிர மற்ற அனைத்து வகையிலும் கடற்பறவைகள் வழக்கமான பறவைகள் போன்றவையே ஆகும்.
- கிரேட் ஆக் எனும் கடற்பறவையானது அழிவதற்கு முன் காணப்பட்ட கடைசி நாளையே உலக கடல் பறவைகள் தினமாக கருதுகிறோம்.
- கடற்பறவைகள், குகை வெளவால்கள் மற்றும் நீர்நாய் ஆகியவற்றின் எச்சமான குவானோ எனப்படுவதில் நைட்ரஜன், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் போன்றவை அதிகமாக இருக்கின்றன.
- இது முக்கியமாக கரிம வேளாண் (இயற்கை உரம்) விவசாயிகளால் பயன்படுத்தப்

படுகிறது.




☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆